

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 20.11.2023 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறை சார்பில் 23.35 கோடி ரூபாய் செலவில் திருச்செங்கோடு,ஈரோடு, ராசிபுரம், பெருந்துறை ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் கட்டப்பட்டுள்ள கிடங்குகள், தானியங்கி வகைப்படுத்தும் படுத்தும் மற்றும் தரப்படுத்தும் இயந்திரங்களுடன் கூடிய ஏலகளங்கள் மற்றும் ஆய்வுக்கூடம், சிந்தாதிரிப்பேட்டை மற்றும் தென்மேல்பாக்கம் நகர கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கட்டப்பட்டுள்ள புதிய சங்கக் கட்டிடம் மற்றும் திருமண மண்டபம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.02.2025 அன்று தமிழ்நாடு முழுவதும் 1000 முதல்வர் மருந்தகங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கும் விழாவிற்கு செல்லும் வழியில், சென்னை, தியாகராய நகர் நகர் பாண்டி பஜாரில், கூட்டுறவுத் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள முதல்வர் மருந்தகத்தை பார்வையிட்டு, பொது மக்களுக்கு முதல்வர் மருந்தகத்தின் மூலம் மருந்துகளின் விற்பனையை தொடங்கி வைத்தார்.

# முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் கூட்டுறவுத் துறை சாதனைகள்!

முதல் பக்கத் தொடர்ச்சி



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 23.9.2024 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் கூட்டுறவுத் துறை சார்பில் 15 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் சாலிகிராமம் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், பூங்கா நகர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மற்றும் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை நிறந்து வைத்தார்.

பட்டியல் வகுப்பினர் - பட்டியல் பழங்குடியின தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக அண்ணல் அம்பேத்கர் வணிக முன்னோடி திட்டம் என்னும் சிறப்புத் திட்டத்தை, 1.4.2023 முதல் நடைமுறைப்படுத்தினார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலம், ரூ.52.34 கோடி கடன் உதவியுடன் துப்புரவுப் பணியாளர்களையும் தொழில் முனைவோராக்கும் வகையில், கொள்முதல் செய்யப்பட்ட கழிவுநீர் அகற்றும் வாகனங்களை 86 துப்புரவுப் பணியாளர்களுக்கு 6.12.2024 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில், வழங்கிப் பாராட்டினார்கள்.

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பல்சேவை மையங்களாக மாற்றுதல்**

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலிருந்து வேளாண் உட்கட்டமைப்பு நிதியின் கீழ் ரூ.565.42 கோடி மதிப்பிலான 5,420 திட்டப்பணிகள் 2,841 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களால் நிறைவேற்றப்பட்டு அவை பல் சேவை மையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

**வாடகை இயந்திரங்கள் மூலம் 2 இலட்சம் விவசாயிகள் பயன்**

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வாடகைக்கு விடப்படும் வேளாண் இயந்திரங்களைக் கூட்டுறவுத்துறையின் "Coopஇவாடகை" செயலி, வேளாண்துறையின் "உழவர்" செயலி ஆகியவற்றிலும், நேரிலும் முன்பதிவு செய்துகொண்டு, ஏறத்தாழ 2 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**தானிய ஈட்டுக்கடன் நகைக்கடன்**

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ரூ.ய392.52 கோடி அளவிற்குத் தானிய ஈட்டுக் கடன்களும்; ரூ.2,089.90 கோடி அளவிற்கு நகைக்கடன்களும் வழங்கியுள்ளன. இச்சங்கங்கள், ரூ.10,283.21 கோடி அளவிற்கு வணிகமும் செய்துள்ளன.

**கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களின் கல்விக் கட்டணம் தள்ளுபடி**

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஆகிய இரு கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் ஏழை, எளிய மாணவர்களுக்கான பயிற்சிக் கட்டணங்கள் 2021-2022, 2022-2023 ஆகிய ஆண்டுகளுக்கு ரூ. 38.50 இலட்சம் தள்ளுபடி செய்யப்பட்டது.

**ஆத்தூரில் கூட்டுறவு கலைமற்றும் அறிவியல் கல்லூரி**

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் 2022-2023ஆம் கல்வியாண்டில் இருபாலரும் பயிலக் கூடிய ஒரு புதிய கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 2.9.2022 அன்று தொடங்கப்பட்டு, 5 பிரிவுகளில் 223 மாணவர்களும், 2023-2024ஆம் கல்வியாண்டில் 7 பிரிவு களில் 252 மாணவர்களும் சேர்க்கப்பட்டு 1,100 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

**பணியாளர்கள் நியமனம்**

2022ஆம் ஆண்டில் கூட்டுறவு நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ள நியாயவிலைக் கடைகளில் 5,748 விற்பனையாளர்கள் 981 கட்டுநர்கள் என மொத்தம் 6,729 பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

2023ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களில் 2,403 உதவியாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

2024ஆம் ஆண்டில் 2,527 விற்பனையாளர் மற்றும் 826 கட்டுநர் பணியிடங்களை நிரப்புவதற்காக 7.10.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. விற்பனையாளர் பணியிடத்திற்கு 2,47,306 விண்ணப்பங்களும், கட்டுநர் பணியிடத்திற்கு 35,421 விண்ணப்பங்களும் பெறப்பட்டு சென்னையைத் தவிர 37 மாவட்டங்களில் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வுகள் நிறைவடைந்துள்ளன.

இதுவரை 9,132 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டும், 3,353 காலிப்பணியிடங்கள் நிரப்புவதற்கும் தொடர்புடைய மாவட்ட ஆள்சேர்ப்பு நிலை யங்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**70 புதிய கூட்டுறவு மருந்தகங்கள்**

2021-2022 சட்டமன்றப் பேரவை அறிவிப்பின்படி, முதலமைச்சர் அவர்களால் மாநிலம் முழுவதும் ஒரே விதமான வண்ணம் மற்றும் தனித்துவமான பெயர்ப் பலகைகளுடன் 70 புதிய மாதிரி கூட்டுறவு மருந்தகங்கள் 16.12.2021 அன்று திறந்து வைக்கப்பட்டு; ரூ. 39.87 கோடி மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**1000 முதல்வர் மருந்தகங்கள்**

முதலமைச்சர் அவர்கள் 2024 ஆகஸ்ட் 15 சுதந்திர தின விழா உரையில் தமிழ்நாடு முழுவதும் 1,000 முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்படும் எனவும் இதன் மூலம் ஜெனரிக் மருந்துகள், பிராண்டட் மருந்துகள், நியூட்ரா செட்டிகல்ஸ், இந்திய மருந்துகள் 25 சதவீத தள்ளுபடி விலையில் மக்களுக்கு வழங்கப்படும் எனவும் அறிவித்தார்கள். இத்திட்டத்தின்படி, தமிழ்நாடு முழுவதும் 1000 மருந்தகங்கள் திட்டம் 24.2.2025 அன்று சென்னை மாநகரில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன.

**கூட்டுறவுத் துறையின் சிறப்பான செயல்பாடுகளுக்கு ஒன்றிய அரசின் விருதுகள்**

புதுடெல்லியில் நடைபெற்ற கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணைய விழாவில் 2022 மற்றும் 2023 ஆகிய இரு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையிலான கூட்டுறவுச் சங்கங்களின் கிடங்குகளைக் கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தில் (WDRA) பதிவு செய்ததைப் பாராட்டி, இந்திய அரசின் கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தால் தமிழ்நாடு அரசுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையம் தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கிகளின் சிறப்பான நிர்வாகத்தைப் பாராட்டி 2024இல் 5 விருதுகள் வழங்கியது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய எல்லோர்க்கும் எல்லாம் என்னும் திராவிட மாடல் அரசின் கொள்கைப்படி கூட்டுறவு அமைப்புகள் தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படுகின்றன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான உணவு பாதுகாப்பை உறுதி செய்கின்றன. விவசாயி களுக்குத் தேவையான பயிர்க் கடன்கள் முதலான இடுபொருள்களை வழங்கி, அவர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலைகள் கிடைப்பதையும் உறுதி செய்து ஒன்றிய அரசின் பாராட்டுகளையும் விருதுகளையும் பெற்று கூட்டுறவுத் துறை மூலம் தமிழ்நாடு இந்தியத் திருநாட்டில் உயர்ந்து சிறந்து விளங்குகிறது.

மேற்கண்டவாறு அரசின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மு.க.முத்து மறைவுக்கு ராகுல்காந்தி இரங்கல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் தொலைபேசி வாயிலாக தெரிவித்தார்!



**சென்னை, ஜூலை 21 - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு, மு.க.முத்து அவர்களின் மறைவையொட்டி இரங்கல் தெரிவித்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர் மற்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி அவர்கள் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு, மு.க.முத்து அவர்களின் மறைவையொட்டி இரங்கல் தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி ஆடி மாதத்தில் வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோயில் கூழ்வார்த்தல் நிகழ்ச்சியை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் சக்திவேல், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன்,நடைமுறை அறங்காவலர் ஏழுமலை,அறங்காவலர்கள் சுரேஷ், மதியழகன்,பச்சையப்பன், சரவணன், வடிவேல், சந்தானம் ஆகியோர் உள்ளனர்.